விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 149 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 03 வியாழக்கிழமை (16.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## யுத்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தனிநாட்டுக் கோரிக்கை வெற்றி பெறும்

### சபையில் சரத் வீரசேகர

(கொழும்பு)

தமிழர்களுக்கு எதிராகவே வடக்கு கிழக்கில் யுத்தம் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் தனி நாடு என்ற அவர்களின் கோசம் வெற்றி பெறும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றில் இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியம் திரட்டும் நடவடிக்கைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சாட்சியங்களை 15



## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் மந்துவிலில் தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் பகுதியைச் 15

## ஒட்டுமடத்தில் வீட்டின் மேற்தளத்தில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒட்டுமடத்தில் பிரபல உணவகம் ஒன்றுக்கு அருகில் உள்ள மாடி வீடொன்றின் மேற்தளத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று இரவு 8.00 மணியளவில் குறித்த தீ விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# வடக்கு மக்களுக்கு அமெரிக்கா ஆதரவு

### யாழில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள மக்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

யாழ். மானிப்பாயில் அமைந்துள்ள கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், வைத்தியசாலை செயற்பாடுகளை பார்வையிட்டார்.

இதன்போது கருத்துரைத்த அவர், வட மாகாணத்தில் 15

## பாலியாறு நீர்த்திட்டம் அங்குரார்ப்பணம்

(மன்னார்)

வடக்கு மாகாண மக்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொடுக்கும் தொலைநோக்கு சிந்தனையில் நிர்மாணிக்கப்படவுள்ள பாலியாறு நீர்த்திட்டம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடை 15

## திருடர்களைப் பிடிப்பதற்காக அரசு பல்வேறு சட்டங்களை கொண்டு வந்துள்ளது - ரணில்

(கொழும்பு)

அரசாங்கம் திருடர்களைப் பாதுகாப்பதாக சிலர் குற்றம் சுமத்தினாலும் திருடர்களைப் பிடிப்பதற்காக அரசாங்கம் பல புதிய சட்டங்களை கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெல்தெனிய புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு 15

## தமிழ்த் தேசிய துக்க தினமாக மே 18ஐ அனுஷ்டிப்போம்

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

(கொழும்பு)

மே 18ஐ தமிழ்த் தேசிய துக்க தினமாக தமிழர் தாயகம் முழுமையும் அனுஷ்டிக்க ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் மக்கள் மிகக் கொடூரமாக கொன்று அழிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலிசுமந்த நாட்களை நினைவுகூருகின்ற 15

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அமைதியின்மை

(கொழும்பு)

ஆர்ப்பாட்டமொன்று காரணமாக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல், வீண் விரயத்திற்கு எதிரான பிரஜைகள் அமைப்பு நேற்று ஏற்பாடு செய்த எதிர்ப்பு நடவடிக்கை காரணமாகவே இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகைகளை அப்புறப்படுத்த பொலி 15

## கட்டைக்காடு கடற்பகுதியில் 18 மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் நேற்று வெற்றிலைக்கேணி கடற்படையினர் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பில் 18 மீனவர்கள் 15

## கிளிநொச்சி இரணைமடுக்குளம் கழிவுகளால் மாசுபடுகின்றது

### கிளிநொச்சி அபிவிருத்திக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)


குடிநீருக்காக நீர்பெறும் கிளிநொச்சி இரணைமடுக்குளம் மாசுபடுவது உறுதியெனில் பொதுநல வழக்கு தொடர வேண்டும் என கூறப்பட்ட நிலையில்மாற்று இடத்தை அடையாளம் காண தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடை 15


நடுவு நிலை தவறாத் தன்மை காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு 04 - 02 - 1960

உதிர்வு 23 - 05 - 2018

மலர்வு 25 - 12 - 1986

அமரர் **மயில்வாகனம் ஜெகநாதன்**

அமரர் **ஜெகநாதன் சஞ்சீவன்**

திதி -16.05.2024

ஆறாண்டு கடந்தாலும் ஆறாது உம் நினைவு
ஆறாகும் எம் விழிகள் அலைபாய்ந்து ஓடிடவே
பேரிடியாய் வந்ததன்று நீங்கள் எம்மை - பிரிந்த செய்தி
யாரிடம் நாம் போய் உரைப்போம்.
இந்த அவலத்தின் கொடும் செயலை
காரிருளாய் போனது எம் உள்ளம்
கண்கள் வெள்ளம் பாய்ந்ததுவே
ஊரே கூடியது ஒப்பாரி ஒலித்ததுவே

வேரிழந்த மரமானோம்.
மின்சாரமாய் விதி முடித்தான் கொடும் மறலி
மின்காந்த முகம் இரண்டும் வெந்து கருகியதே
ஆறாண்டு கடந்ததப்பா நீங்கள் எம்மை விட்டு சென்று
இறுதியாய் பார்த்த முகம் இன்னும் ஒளிர்கின்றது
உறுதியாய் வைத்து இருப்போம்
உள்ளமதில் உம் உருவை
அறுதியாய் சென்றிணைவீர் அம்பலவன் திருவடிக்கீழ்

(0064)

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
☎-077 533 7406

வானகம் போன் சிற்றி
இல : 64/121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[ சம்பத் வங்கி முன்பாக ]

வானகம் போன் சிற்றி
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
[ BOC அருகாமையில் ]

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்**

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ஆழ்வான் சந்திரநாதன்

(அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி
கூ. சங்கம் ஓய்வு பெற்ற கிராமிய வங்கி முகாமையாளர் )

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் - அப்பா
ஆண்டு ஒன்று ஆனாலும்
உம் நினைவுகள் அழியவில்லை - அப்பா
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் எம்முடன் இருப்பீர்கள் - அப்பா

(0067)

தோற்றம்
20.09.1952

மறைவு
28.05.2023

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனன்மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினி படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு குமுதினி படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினி படுகொலை நினைவுத் தூவியில் நடைபெற்றது

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு உணர்வெளிச்சியுடன் இடம்பெற்றது.

மேலும் குமுதினி படகில் இருந்து கடலில் மலர்தூவி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இந் நிகழ்வில் முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைப்பு மற்றும் உயிரிழந்தவர்களின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டன. இதன் போது ஆதீதன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள். நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ். பத்திநாதன். மதத் தலைவர்கள் படுகொலையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.





பசுந்தீவு ருத்திரன் எழுதிய குமுதினி படுகொலை நினைவுகளைச் சுமந்த "உப் புக் கடலை உரசிய நினைவுகள்" என்ற கவி நூல் வெளி யீடும் இடம் பெற்றது.

1985.05.15 இதே போன்ற நாளில் நெடுந்தீவு கடற்பரப்பில் நெடுந்தீவு மாவிலித்துறை முகத்தில் இருந்து யாழ். புங்குடுதீவு குறிகட்டுவான் நோக்கி கடலில் குமுதினி படகில் மக்கள் பயணித்த போது கடற்படையினரால் 7 மாத பெண் குழந்தை பெண்கள் அடங்கலாக உட்பட 36 பேர் நடுக்கடலில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# நான்கு மாதங்களில் 264 தொழுநோயாளிகள்

## தொழுநோய்கட்டுப்பாட்டுச்சபை

(கொழும்பு)


**இந்த ஆண்டில் 264 புதிய தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளதாக தொழுநோய் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.**

அவர்களில் 24 பேர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என அதன் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நிருபா பல்லேவத்த தெரிவித்துள்ளார்

அத்துடன் 2023 ஆம் ஆண்டில் 1,580 தொழு நோயா ளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் பாதிக்கப்பட்ட 1,580 பேரில் 180 குழந்தைகள் உள்ளனர். மேலும் 12 சதவீத குழந்தைகள் 15 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் நோயைப் பரப்பும் திறன் அவர்களிடம் இல்லை. அத்துடன் இந்த ஆண்டு, 8 சதவீத மாற்றுத் திறனாளி நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-6)

# நாடளாவிய ரீதியில் 1220 கொத்தணி பாடசாலைகள்

## கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

கல்லி நிர்வாக சீர்திருத்தத்தின் ஆரம்ப கட்டமாக நாடளாவிய ரீதியில் 1,220 கொத்தணி பாடசாலைகள் உருவாக்கப்படுவதுடன் இவற்றைக் கண்காணிக்க 350 பாடசாலை குழுக்கள் உருவாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜ யந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து அதற்குரிய சுற்று நிருபம் எதிர் வரும் நாட்களில் வெளியிடப் படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி-6)




**புனித பிலிப்பு நேரியார் ஆலயம், செம்பியன்பற்று**

வருடாந்த திருவிழா - 2024

**திருக்கொடியேற்றம்**

2024.05.17 (வெள்ளிக்கிழமை) 5.15 மாலை

**நவநாள் திருப்பலிகள்**

மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பம்.

**நற்கருணைப்பெருவிழா**

2024.05.25 (சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பம்.

**திருவிழாத்திருப்பலி**

2024.05.26 (ஞாயிற்றுக்கிழமை) காலை 5.45 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பம்.

போக்குவரத்து விசேட சேவைகள் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் இருந்து 2024.05.25, 2024.05.26 ஆகிய தினங்களில் இடம்பெறும்.

(758)

**அன்புடன் அழைத்துநிற்கும் செம்பியன்பற்று பங்குத்தந்தை, ஆலய அருட்பணி சபையினர் மற்றும் பங்கு மக்கள்**


# கல்விசாரா ஊழியர்களை பணிக்கு திரும்புமாறு அழைப்பு

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக இலங்கையில் பல்கலைக்கழக அமைப்பு பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும், கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் மாணவர்களைப் பற்றி சிந்தித்து பணிக்கு சமூகமளிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு 7 இல் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

கல்விசாரா ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக தற்போது பல்கலைக் கழக கல்வி நடவடிக்கைகள் இணைய வழியில் நடத்தப்பட்டு வருவதாகவும் ரஜரட்ட பல்கலைக் கழகத்தில் கற்கும் சுமார் 3500 மாணவர்கள் விடுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர்

மேலும் கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழக நுழைவுக்கான மாணவர் கையேடு தயாரிக்கும் பணிஸ் தம்பிதமடைந்துள்ளதாகவும், மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதும் தாமதமடைந்துள்ளதாகவும் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

## சிவபாதம் சிவசுதன் (பில்லா சுதன்)

மலர்வு: 29.12.1983

உதிர்வு: 16.12.2023

ஓடி உருண்டது உமைப் பிரிந்து மாதம் ஆறு!
வாடி வதங்குகின்றோம் உமைப் பிரிந்து எண்ணி நிதம்!
மாதம் ஆறு சென்றாலும் – எம் நெஞ்சமதில்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

அம்மா, அப்பா, சகோதரர்கள்

076 709 5337

(C-0377)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற எழுதுநர் - பொலிஸ் திணைக்களம்,
முன்னாள் பிராந்திய உதவி முகாமையாளர் ச.தொ.ச யாழ்ப்பாணம்)

முத்திரைச்சந்தியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இராஜரட்ணம் அவர்கள் நேற்று (15.05.2024) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - நாகம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், நாகம்மா, சீவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் மஞ்சுளா (பல் வைத்தியர்), சசிகரன் (உரிமையாளர் NRS மூக்குக் கண்ணாடியகம் - யாழ்ப்பாணம்), கோபிதரன் (நிர்வாக இயக்குநர் - STS வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகுமார் (கண் வைத்திய நிபுணர் STS வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுபாயினி (ஆசிரியர் - திருக்குடும்ப கன்னியர்மடம், பம்பலப்பிட்டி), தர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஸ்வினி (மருத்துவபீட மாணவி - கொழும்புப் பல்கலைக்கழகம்), துவாரகன் (மருத்துவபீட மாணவன் - கொழும்புப் பல்கலைக்கழகம்), சுவஸ்தி, நதிசன், ஜஸ்னிகா, பிரஜீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.56, விநாயகர் வீதி கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

(767)



தோற்றம் : 18.09.1945 மறைவு : 15.05.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



குரு பகவானை இராசிநாதனாகக் கொண்ட மீன இராசி அன்பர்களே!

நீங்கள் இரக்க சிந்தனை கொண்டவர்கள். கிரகநிலை - தனவாக்கு ஸ்தானத்தில் இருந்து தைரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது சப்தம ஸ்தானம் - பாக்கிய ஸ்தானம் - லாப ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 05.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ் இராசியிலிருந்து ரிஷப இராசிக்கு மாறுகிறார்.

**மீனம் இராசியினருக்கான குரு பெயர்ச்சி பலன்கள்:**

தைரிய ஸ்தானத்திற்கு மாறும் குரு பகவானால் நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடந்து மனநிம்மதி அடைவீர்கள். அனைத்து விடயங்களும் படிப்படியாக சீராகும். வருமானம் உயரும். வீண் விரயம் ஏற்படாத வகையில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வீர்கள். செய்தொழிலில் நேர்முக, மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். புதியவர்கள் கூட்டாளிகள் ஆவார்கள். இதனால் கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சிறப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரும். அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள். ஆற்றல் மிகுந்தவர்களையும். திறமைசாலிகளையும் உறுதுணையாகக் கொண்டு புதிய முயற்சிகளை செயற்படுத்துவீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். உங்களின் இல்லம் தேடி விருந்தினர்கள் வருவார்கள். மற்றவர்கள் முடியாது என்று விட்டுவிட்ட காரியங்களைக் கூட நீங்கள் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள்.

உங்களின் மன பலத்தை மூலதனமாக்கி கொள்வீர்கள். திருமணம் தடைபட்டவர்களுக்கு நல்லபடியாக திருமணம் நடக்கும். குடும்பத்தாருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆன்மீக சுற்றுலா சென்று வருவீர்கள். மற்றபடி வெளியாட்களிடம் உங்களின் தொழில் இரகசியங்க்ளைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விட்டுக்கொடுத்து முடித்துக் கொள்ளவும்.

நம்பகமான கூட்டாளிகளிடம் முக்கியமான வேலைகளைப் பிரித்துக் கொடுத்து அவர்களின் விருப்பப்படி செயற்பட அனுமதிப்பீர்கள். அனுபவசாலிகளின் வழிகாட்டுதலின்படி குறித்த காலத்தில் திட்டமிட்டு செயற்படுவீர்கள். உங்களின் காரியங்கள் நேர்த்தியாக இருக்குமாறு பார்த்துக்கொள்வீர்கள். நல்ல நண்பர்களின் ஒத்துழைப்புடன் கடினமான வேலைகளையும் செய்து முடிப்பீர்கள்.

பெற்றோர் வழியில் சில மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். உடன் பிறந்தோரால் அநாவசியப் பிரச்சினைகள் ஏற்படலாம். அதனால் அவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அநாவசியமான பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மேலும் பயணங்களின் போது கவனம் தேவை. மற்றபடி பிள்ளைகளுக்கு சிறப்பான வருமானம் தரும் உத்தியோகம் கிடைக்கும். எவருக்கும் இந்தக் கால கட்டத்தில் வாக்குகொடுப்பதோ முன் ஜாமீன் போடுவதோ வேண்டாம்.

உத்தியோகத்தர்கள் இயந்திர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்க நினைப்பீர்கள். உங்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பவர்களை இனம் கண்டு விலக்குவீர்கள். பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல் விடயங்கள் நல்லபடியாக முடியும். கூட்டாளிகள் உங்களை நம்பிப் புதிய முதலீடுகளில் ஈடுபட சம்மதிப்பார்கள். புதிய சந்தைகளை நாடிச் சென்று உங்களின் வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். இதனால் சக வியாபாரிகள் மத்தியில் உங்கள் செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள்.

அரசியல்வாதிகள் திட்டமிட்ட காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக முடிப்பீர்கள். உங்களுக்கு கட்சியில் எதிர்ப்புகள் அதிகரிக்கும் என்பதால் உட்கட்சிப் பூசல்களில் சிக்கிக்கொள்ளாமல் தப்பித்துக் கொள்வதே புத்திசாலித்தனம். கலைத்துறையினர் பழைய ஒப்பந்தங்களை நன்கு முடித்துக் கொடுத்த பிறகே புதிய ஒப்பந்தங்களைப் பெற முயற்சிக்கவும். இரசிகர்களின்




மனம் புண்படாத வகையில் நடந்துகொள்ளுங்கள். சக கலைஞர்களும் உங்களுக்கு உதவக் கூடிய நிலையில் இருப்பார்கள். எனவே அவர்களின் மனம் குளிர நடந்து கொண்டு அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பெண்மணிகள் குடும்பத்தில் ஒற்றுமையைக் காண்பீர்கள். கணவரிடம் அன்பு, பாசம் அதிகரிக்கும். உறவினர்களை அனுசரித்து நடந்துகொண்டு உங்கள் செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்ளுங்கள். மாணவமணிகள் படிப்பில் முழு கவனத்தையும் செலுத்தினால் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம். அதனால் தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம். மற்றபடி விளையாட்டுகளில் அதிக ஈடுபாடு செலுத்தி வெற்றி பெறுவீர்கள். சக மாணவர்களிடம் கவனமாகப் பழகவும்.

**பூரட்டாதி 4ம் பாதம்:** இந்த குரு பெயர்ச்சியால் புதிய வேலை தேடுபவர்களுக்கு தாமதமானாலும் நல்லவேலை கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்பட்டாலும் மனதில் இறுக்கம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதம் ஏற்படும். பிள்ளைகள் மூலம் செலவு இருக்கும்.

**உத்திரட்டாதி:** இந்த குருப்பெயர்ச்சியால் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். மனநிம்மதி கிடைக்கும். காரிய வெற்றி உண்டாகும். நீண்டநாட்களாக நினைத்திருந்த காரியம் வெற்றி அடையும். மேலிடத்திலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். பணவரத்து உண்டாகும். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. வியாபாரிகளுக்கு காரிய தடை ஏற்படலாம். கவனம் தேவை. காரிய அனுகூலம் உண்டு. ஆனால் தாமதப்படும். எதிர்ப்பார்த்த பணவரவு தாமதமாக கிடைக்கும். கூட்டுத் தொழில் இலாபம் அடையும். கடின உழைப்பு காரிய வெற்றியைத் தேடித் தரும். வெளியூர் சென்றுவர நேரிடலாம்.

**ரேவதி:** இந்த குருப்பெயர்ச்சியால் மனதில் கவலை ஏற்பட்டு நீங்கும். எவ்வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். சாதகமான பலன்கள் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஓர்டர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களின் போது உடமைகளை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களை செயற்படுத்துவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்துடன் வெளியூர் சென்று வருவீர்கள்.

**பரிகாரம்:** மாரியம்மனை வணங்க எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். கடன் பிரச்சினை தீரும் **சிறப்பு பரிகாரம்:** சஷ்டி தோறும் முருகனுக்கு பாலபிஷேகம் செய்வது நன்மை

**சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஷட் ஷண்முகாய நம" என்ற மந்திரத்தை தினமும் 15 முறை சொல்லவும்

**அதிஷ்ட எண்கள்:** 2. 6. 9

**அதிஷ்ட ஹோரைகள்:** சந்திரன், செவ்வாய், சுக்கிரன்

**அதிஷ்ட திசைகள்:** மேற்கு, தெற்கு

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய், வெள்ளி

(முற்றும்)

## புதிய வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும்

# இராசிபலன்

16.05.2024
வைகாசி 03, வியாழக்கிழமை,
அட்டமி முற்பகல் 8.55 மணிவரை

மகம் முன்னிரவு 8.24 மணிவரை
சுபநேரம் 7.23-8.53 மணிவரை
இராகுகாலம் 1.23-2.53 மணிவரை

அட்டமி, நவமி
சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்




பிள்ளைகள் குடும்பப் பொறுப்புக்கள் தெரிந்து நடந்து கொள்வார்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும், வழிபாடு திருப்தி தரும், தாழ்ந்த சுபாவம் உண்டு.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டுகொள்வீர்கள்,வருமானம் திருப்தி தரும்.




நன்மைகள் நடைபெறும் நாள், தொழில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் காண்பீர்கள், உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், குடும்ப சுமை கூடும் ,ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கற்பனை மிகுதியான நர்ள்.




அலைச்சல்கள் காணப் பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள்.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், தொழில் வளர்ச்சி கூடும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




உதாசீனப்படுத் தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்களால் பலனுண்டு.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினரிடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றையும் செய்து முடிப்பீர்கள், இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

துணிச்சல் [illegible] நிலை அடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா திருநாவற்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



(குருமன்காடு)

முள்ளிவாய்கால் 15 ஆம் நினைவு நாளை முன்னிட்டு வவுனியா, திருநாவற்குளத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் பலர் இணைந்து குறித்த கஞ்சி திருநாவற்குளம் பிரதான வீதியில் வைத்து வ்ழங்கி வைக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இறுதியுத்தத்தின் போது மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை உணவாக உட்கொண்டே உயிர்பிழைத்தனர். அதன் 15 ஆவது ஆண்டினை நினைவு கூர்ந்தும், அடுத்த தலைமுறைக்கு வரலாற்றை கடத்தும் நோக்குடன் இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

இதன் போது வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கி பருகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவித்தல் தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் தலைவர் உள்ளிட்ட குழுவினரும், ஆளுநரின் உதவிச் செயலாளர், உள்ளூராட்சித் திணைக்கள பணிப்பாளர், மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உள்ளூர் எழுத்தாளர்களின் தற்போதைய நிலைமை, பதிப்பகங்கள், அச்சகங்களின் செயற்பாடுகள், நூல் பதிப்பு மற்றும் விற்பனை, கலை, இலக்கியத் துறையின் சமகாலப்போக்கு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

உள்ளூராட்சி அமைப்புகள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி திணைக்களங்கள் தம்மிடம் காணப்படும் நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்ய உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதைப் போல, கலைகளையும் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.திறந்தவெளி அரங்குகளில் உள்ளூர் கலைகளை மேடையேற்றி அவற்றினை அழிந்திடாமல் பாதுகாத்து புத்துயிர் வழங்க மாகாண கலாசார திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார். (நி-6)

# ஆனந்தவர்மனின் விடுதலையில் அக்கறை கொள்ளாத அரசாங்கம்

## குரலற்றவர்களின் அமைப்பு விசனம்

(யாழ்ப்பாணம்)

சிறையில் ஒன்பது நாட்களாக உணவெறுப்பில் ஈடுபட்டு வருகின்ற சமூக செயற்பாட்டாளரான ஆனந்தவர்மனின் விடுதலையில் அக்கறைகொள்ளாத அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசுகிறது என குரலற்றவர்களின் குரல் அமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கொழும்பு விளக்கமறியல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த ஒன்பது நாட்களாக உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற சமூக செயற்பாட்டாளரான செல்வநாயகம் ஆணந்தவர்மனை நேற்று முன்தினம் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் சிறை வைத்தியசாலைக்கு நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினர்.

நீண்ட காலமாக உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த இவர், தற்போது ஒன்பது நாட்களை கடந்தும் உறுதியோடு மேற்கொண்டு வருகின்ற உணவுத் தவிர்ப்பு காரணமாக உடல் உருக்குலைந்து மிகவும் சோர்வுற்ற நிலையில் வெலிக்கடை சிறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே, இதன்மூலம் மக்களின் பக்கம் நின்று ஜனநாயக வழியில் பொதுவெளியில் செயற்பட்டு வருகின்ற சிவில் செயற்பாட்டாளர்கள் மீது அரச இயந்திரங்களைக் கொண்டு மறைகரமாக அடக்கு முறைகளை மேற்கொண்டு, சட்டத்தின் பெயரில் குரல்வளைகளை நசுக்குகின்ற செயல்களில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றமையைகாண முடிகிறது என தெரிவி க்கப்பட்டுள்ளது. (நி-6-33)


## வேலையாட்கள் தேவை

நெல்லியடியிலுள்ள பிரபல கிறீம் ஹவுஸ் ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு: 077 377 3197

(சி-0372)



# கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)**

1. தலைவர் பிராந்திய பெறுகைக்குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **17.05.2024 ஆம் திகதி முதல் 30.05.2024 ஆம்** திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. **22.05.2024** ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
7. கேள்விகள் **31.05.2024 ஆம்** திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர் பிராந்திய கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொருட்களுக்கான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். **31.05.2024** ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **(Bid Security)** செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| No | Bid ID | Description | Quantity | Estimated Cost (Rs.) In Million without VAT | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/PSSP/Fu/01/2024 | Celling Fans | 20 | 3.83 MN | 2,500.00 | 40,000.00 | 30.08.2024 |
| | | Wall Fans | 10 | | | | |
| | | Air Conditioner 18000Btu | 01 | | | | |
| | | Air Conditioner 24000Btu | 01 | | | | |
| | | Executive Chair | 01 | | | | |
| | | Executive Table | 01 | | | | |
| | | Refrigerators | 04 | | | | |
| | | Arm Chair | 20 | | | | |
| | | Almirah Steel with Front Glass | 10 | | | | |
| | | Revolving chairs Low back | 30 | | | | |
| | | Office Table | 30 | | | | |
| | | Pin board 6x4 | 20 | | | | |
| | | White Board 5x4 | 20 | | | | |
| | | Plastic Chair | 100 | | | | |
| | | Cloth Rack | 05 | | | | |
| | | Iron Rack | 02 | | | | |
| 02 | NP/K/RDHS/PSSP/IT/EQ/01/2024 | Desktop Computer Full Set | 13 | 4.6 MN | 2,500.00 | 50,000.00 | 30.08.2024 |
| | | Laptops | 04 | | | | |
| | | Printer | 07 | | | | |
| | | A3 Colour Printer | 01 | | | | |
| | | Photocopy Machine | 01 | | | | |

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமன்னை,
கிளிநொச்சி.
TP- 021 228 5932, Fax - 021 228 5931 Email-rdhskoc@gmail.com,
financerdhskoc@gmail.com

(சி-0371)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட் விற்பனையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)நாட்டில் இவ்வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் சிகரெட் விற்பனையானது கடந்த ஆண்டை விட குறைவடைந்துள்ளதாக இலங்கை புகையிலை உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்பு, மக்களின் வருமானம் வீழ்ச்சி மற்றும் பொருளாதார நெருக்கடிகளே இதற்கு காரணம் என இலங்கை புகையிலை உற்பத்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.அதன்படி, கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை சிகரெட் விற்பனை வருமானம் 46.93 பில்லியன் ரூபாவில் இருந்து 45.85 பில்லியன் ரூபாவாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிகரெட்டுக்கான வரி அதிகரிப்பு காரணமாக சிகரெட் பாவனையாளர்களில் அதிகமானோர் பீடி பாவனைக்கு பழகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

## விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு,முல்லைத்தீவு.

### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமான தற்காலிக பொதுமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தி அத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு எதிர்வரும் 05.06.2024 ஆம் திகதிக்கு முன்னராக தலைவர், விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

- வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களிற்கு வயதெல்லை பொருந்தாது)
- முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும் வேறு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரியவருமாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.
- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கங்கள் 04/2017(1), 04/2018(1) இற்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படியும் விசேட செயலாற்றுகைப் படியும் வழங்கப்படும்.
- இப்பதவிக்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தில் பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

*திரு.புலேந்திரன் யசோதரன்,*
*தலைவர்,*
*விசுவமடு விவசாயிகள் பல நோக்குக்*
*கூட்டுறவுச் சங்கம், விசுவமடு.* *திகதி :- 16.05.2024*

**பதவி :- பொதுமுகாமையாளர் (தற்காலிகம்)**
சம்பள குறியீட்டு இல :- 101/08
சம்பள அளவுத்திட்டம் :- 20665.00 - 260 x 10 - 280 x 10 - 26065.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் 01/2022 இற்கு, 04/2024 இற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/=, ரூபா 5000/= (மொத்தம் ரூபா 10,000.00) மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு 2024.02.15 ஆம் திகதிய கடிதத்துக்கமைய மாதாந்தம் ரூபா 5000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/அதற்குச் சமமான தகைமை. இத்தகமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடங்கியிருத்தல் வேண்டும். இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. **அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

**தலைவர்,**
**விசுவமடு விவசாயிகள் பல நோக்குக்**
**கூட்டுறவுச் சங்கம், விசுவமடு.**
(சி-0369)

## J/ Jaffna Central College

### Vacancy for Under-10 Cricket Coach

Jaffna Central College Jaffna is a well reputed school in the North is looking for self motivated, dedicated,energetic and sincere under 10 cricket coach.

**Requirements:**

- Strong values such as honesty,intergrity,sportsmanship and work ethics.
- Coaching six days per week.
- Prepare monthly reports and submit to Sports in charge.

**Coaching qualifications and experience**

- Able to work with school administration to develop the game of cricket at school.
- It's a two year contract subject to renewable on individual progress and performances.

- **Salary Rs.30000/ per month.**
- **Closing date 28 th of June 2024.**
- **Applications should be signed with two non-related referees.**
- **Applications should be sent to Principal,Jaffna Central College,Jaffna.**

(C-0370)

**Principal**

## யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்(வ.து) இல 52 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குழி யாழ்ப்பாணம்

### பதவி வெற்றிடங்கள் (வெளிவாரி)

எமது சமாசத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.**பதவி :-அச்சு இயந்திர இயக்குனர் (ஒவ்செற்)**
**குறியீட்டு இல :-** 328/14
**சம்பள அளவுத்திட்டம்** :-17900.00-155x10-165x10-21100.00(சுற்று நிருபம் 02/2022 இன் படி)
**வெற்றிடம் :-** 01

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**
(அ) கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்.
**அல்லது**
ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

2. **பதவி:- அச்சக தொழிலாளி**
**குறியீட்டு இல:-** 318/17
**சம்பள அளவுத்திட்டம்** :-16515.00-130X10-145X10-19265.00 (சுற்று நிருபம் 02/2022 இன்படி )
**வெற்றிடம்** :- 01

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

05 ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்

**வயது:- 18-45**

**ஏனைய விடயங்கள் -**

1. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் மற்றும் படிகள் வழங்கப்படும்.
3. தகமைச் சான்றிதழ்களின் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. தகமையற்ற, சரியாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்
5. விண்ணப்ப முடிவுத் திகதி - **31.05.2024**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சமாச அலுவலக நேரத்தில் விண்ணப்பபடிவங்களை ரூ50.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள்**பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து), இல52 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குழி யாழ்ப்பாணம்** என முகவரியிட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


**திரு செ.செல்வராசா,**
**தலைவர்.**
**தொலைபேசி இல -021 222 5072** (சி-0368) திகதி-16.05.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

- 800 விருந்தினர்கள்
- 600 பணியாளர்கள்
- நடுக்கடலில் விழா ஏற்பாடுகள்

## ஆனந்த் அம்பானியின் திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டங்கள்



(டில்லி)

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளரும் இந்திய தொழிலதிபருமான முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானியின் திருமணத்தின் இரண்டாவது முறை முந்தைய விழா விரைவில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலக பணக்காரர்களுள் ஒருவராக இருக்கும் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானிக்கும், ராதிகா மெர்ச்சன்டிற்கும் திருமணத்திற்கு முந்தைய விழா இரண்டாம் பாகம் மே 28 முதல் 30 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டம் நடுக்கடலில் ஒரு பயணக் கப்பலில் நடைபெறவிருக்கிறது.உல்லாசக் கப்பல் இத்தாலியின் நகரதுறைமுகத்திலிருந்து புறப்பட்டு தெற்கு பிரான்சில் தனது பயணத்தை முடிக்கும்.மே 28 ஆம் திகதி இத் தாலியில் இருந்து புறப்படும் இந்த கப்பல் 2365 கடல் மைல் (4380 கிமீ) தூரம் பயணிக்கும்.

இந்த விழாவில் சுமார் 800 விருந்தினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்த விருந்தினர்களைக் கவனிப்பதற்காக 600 பணியாளர்கள் உல்லாசக் கப்பலில் பணி அமர்த்தப்படுவார்கள்.முன்னதாக, ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சன்ட்டின் முதல் திருமணத்திற்கு முந்தைய விழா மார்ச் 1 முதல் 3 வரை நடைபெற்றது.

இதில் சுமார் ரூ.1200 கோடி செலவிடப்பட்டது. இந்த கொண்டாட்டத்தில் ரிஹானா, எகான் , பில் கேட்ஸ் , மார்க் ஜுக்கர்பெர்க், ஆனந்த் மஹிந்திரா என பல பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

அம்பானி குடும்பம் நடத்தும் இரண்டாவது திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டத்தில் சல்மான் கான் , ஷாருக்கான் மற்றும் அமீர் கான் ஆகியோர் விருந்தினர் பட்டியலில் இடம் பெறுவார்கள் என்று கூறப்படுகிறது.

ஆகாஷ் அம்பானி மற்றும் ஸ்லோகா மேத்தா வுடன் நெருங்கிய நண்பர் களான ரன்பீர் கபூர் மற்றும் ஆலியா பட் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். முகேஷ் அம்பானியும் நீதா அம்பானியும் தங்கள் மகன் ஆனந்த் அம்பானியின் நாளை மறக்க முடியாததாக மாற்ற தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றனர்.

ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சண்ட் திருமணம் ஜுலை 12 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## சபஹர் துறைமுக ஒப்பந்தம் ஈரானுடன் கைச்சாத்திட்ட இந்தியா

### இந்தியாவை எச்சரிக்கும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஈரானுடனான சபஹர் துறைமுக ஒப்பந்தத்துக்கு, அமெரிக்கா இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானுடனான எந்தவொரு வணிக ஒப்பந்தமாக இருந்தாலும், பொருளாதாரத் தடைகள் விதிப்பதற்கான 'சாத்தியமான ஆபத்து' இருப்பதாக அமெரிக்காவின் வெளியுறவுத் துறை துணை செய்தித் தொடர்பாளர் வேதாந்த் படேல் தெரிவித்துள்ளார்.



ஈரானிலுள்ள சபஹர் துறை முகத்தை, கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் குத்தகை அடிப் படையில் நிர்வகித்து வரும் இந்தியா, தற்போது தொடர்ந்து 10 ஆண்டுகள் நிர்வகிக்க ஈரானுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் சர்பானந்த சோனோ வால் முன்னிலையில், இந்தியா-ஈரான் இடையேயான இந்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்தானது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் வழியாக மத்திய ஆசிய நாடுகளுக்கு, பொருட்களை அனுப்புவதற்கு, சபஹர்துறை முகத்தை பயன்படுத்துவதால் போக்குவரத்து செலவும் கணிசமாக குறைகிறது.

ஆகவே, மத்திய ஆசிய நாடுகளுடனான வர்த்தகத்தை விரிவுபடுத்த் இந்த துறைமுக ஒப்பந்தம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்கு அமெரிக்கா மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்கத் தடைகள் நடைமுறையில் உள்ள நிலையில், சபஹர் துறைமுக ஒப்பந்தம் மற்றும் ஈரானுடனான இருதரப்பு உறவுகள் விடயத்தில், இந்திய அரசு தனது வெளியுறவுக் கொள்கைகளை தெரிவிக்கும்படி கேட்போம் என அமெரிக்காவின் வெளியுறவுத்துறை துணை செய்தித் தொடப்பாளர் வேதாந்த் படேல் தெரிவித்தார். (நி-6)

## ரஷ்ய ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம்



(பீஜிங்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

சீன ஜனாதிபதி சி ஜின் பிங்கின் விசேட அழைப்பிற்கு இணங்கவே ரஷ்ய ஜனாதிபதி சீனாவுக்கு பயணமாகவுள்ளார்.

[illegible] நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதியாக 5 ஆவது முறையாகப்பதவி ஏற்றதன் பின்னர் புடின் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.(நி-6)

## திடீரென ... இந்தோ...

- வெள்ளத்...
- ஆயிரக்கண...

(ஜகர்த்தா)—
**இந்தோனேசியா... இடங்களில் வெ... அடித்துச் செல்... எரிமலையும் வெ... சகதியுமாக காட்சி...**

சுமத்திரா மாகாணத்தில் 4 மாவட்டங்களில் பெரும்பாலான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இந்தோனேசியாவில் கனமழை ... 58 பேர் ... னர்.

மேலும் ... ஏற்பட்ட ... த்துச் செல்... நாட்டின் ...

## 20 வருடங்க... சிங்கப்பூர் பிரத...



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரை நீண்ட காலம் ஆட்சி செய்த பிரதமர் லீ சியன் லூங் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார்.

எனினும் அமைச்சரவையில் முக்கிய பதவியில் அவர் நீடிக்கவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் ... டுள்ளன.சி... பது ஆண்... யாக ஆட்சி ... அதிகாரங் ... துணைப் ... அமைச்சரு... வோங்கிட... வுள்ளதாக ...

## ரஃபா நகரில் இ... 4.50 லட்சம் பேர் வெ...

### ஐ.நா. அறிவிப்பு

(ஜெனீவா)

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான ... பேரழி... காசாவில் ... கள் உட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரன பெருக்கெடுத்த வெள்ளம்

# தோனேசியாவில் 58 பேர் உயிரிழப்பு!

## ளத்தில் மூழ்கிய 4 மாவட்டங்கள்

## க்கணக்கான வீடுகள் சேதம்

ர)

**னேசியாவில் பெய்து வரும் கனமழையினால் பல்வேறு ல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் செல்லப்பட்டு 58 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ம் வெடித்திருப்பதால் பெரும்பாலான இடங்கள் சேறும் காட்சியளிக்கின்றன.**





கனமழை வெள்ளத்திற்கு 58 பேர் பலியாகி உள்ள னர்.

மேலும் பலர் திடீரென்று ஏற்பட்ட வெள்ளத்தில் அடி த்துச் செல்லப்பட்டதாக அந் நாட்டின் பேரிடர் மேலா ண்மை அமைப்பு தெரிவித் துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றதுடன் மக்கள் மீட்கப்பட்டு பாது காப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த மார்ச் மாதம் மேற்கு சுமத் திராவை பாதித்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 26 பேர் உயிரிழந்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# டங்கள் ஆட்சி செய்த

## பிரதமர் திடீர் ராஜினாமா



ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. சிங்கப்பூரை இரு பது ஆண்டுகள் தொடர்ச்சி யாக ஆட்சி செய்த லீ தனது அதிகாரங்களை நாட்டின் துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான லாரன்ஸ் வோங்கிடம் ஒப்படைக்க வுள்ளதாக சர்வதேச ஊடக ங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1965ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற சிங்கப்பூர் நாட்டினை, மூன்று பிரதமர்கள் மட்டுமே ஆட்சி செய்திருந்தனர். குறித்த மூன்று பிரதமர்களும் மக்கள் செயல் கட்சியை சேர்ந்தவர்கள் என ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நாட்டின் முதல் பிரதமர் லீ குவான் யூ தற்போதைய பிரதம ரின் தந்தையாவார். லீ குவான் யூ சிங்கப்பூரை 25 ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தார்.

இந்நிலையில் பிரதமர் லீ சியன் லூங்கின் பதவி விலகலுடன் சிங்கப்பூரின் அரசியல் தலைமை த்துவம் "லீ குடும்பத்தின்" நிழலில் இருந்து விடுபட்டுள்ளதாக அரசி யல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

எனினும் தற்போதைய பிரதமர் அந்நாட்டு அமைச்சரவையில் மூத்த அமைச்சராகப் பணியாற் றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (நி-6)

# கனடாவில் காட்டுத்தீ பரவல்

## எண்ணெய் வளமிக்க பகுதிக்கு அச்சுறுத்தல்

(ஒட்டாவா)

கனடாவின் எண்ணெய் வளம் மிக்க போர்ட் மெக்முரே பகுதியில் பாரிய காட்டுத்தீ தீவிரமாகப் பரவி வருகிறது.

இதன் காரணமாக நான்கு புறநகர்ப் பகுதிகளில் உள்ள சுமார் 6,000 மக்களை வெளி யேறுமாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தர விடப்பட்டுள்ளது.



வறட்சி மற்றும் பலத்த காற் றினால் ஆல்பர்ட்டாவின் மேற்கு மாகாணத்தில் கட ந்த வாரம் முதல் காட்டுத் தீ தீவிர மடைந்துள்ளது.

தற்போது காட்டுத் தீ தென் மேற்கே சுமார் 13 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அங்கு மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியுள்ளது.

பலத்த காற்று வீசுவது துர திர்ஷ்டவசமாக எங்களு க்கு சாதகமானதாக இல்லை. காற் றின் வேகம் குறையும் வரை காட்டு தீ நகரத்தை நோக்கி தொடர்ந்து பரவி வரும் என ஆல்பர்ட்டா காட்டுத் தீ தகவல் தொடர்பு அதிகாரி ஜோசி செயி ன்ட்-ஓங்கே தெரிவித்துள் ளார்.

காட்டுத் தீ தீவிரமடைந்து ள்ளதால் வானம் புகையால் சூழப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக தீயணை ப்பு வீரர்கள் தீ பரவும் பகுதி யிலிருந்து வெளியேற்றப்பட் டனர். 10,000 ஹெக்டயர் பரப் பிலான வனப்பகுதிகளில் தீ பற்றி எரிந்து வருகிறது. (நி-6)

# ில் இருந்து

## ர் வெளியேற்றம்

யிலான போரால், காசா முனை பேரழிவை சந்தித்துள்ளது. காசாவில் குழந்தைகள், பெண் கள் உட்பட 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ள னர்.

இதற்கிடையே லட்சக்கண க்கானோர் தஞ்சம் அடைந்து ள்ள தெற்கு காசாவில் உள்ள ரஃபாநகரம் மீது இஸ்ரேல் தா க்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது. பாலஸ்தீனியர்களின் கடைசி



புகலிடமாக உள்ள ரஃபாவில் இரு ந்து வெளியே றுமாறு அவர்களை இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

இதையடுத்து ரஃபாவில் இருந்து அவர்கள் வெளியேறி வருகிறார்கள். இதற்கிடையே கடந்த வாரத்தில் குறைந்தது 4.50 லட்சம் பாலஸ்தீனியர்கள் ரஃபாநகரில் இருந்து வெளியேற்றப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரில் இறந்தவர்களை

# நினைவு கூர

## தமிழருக்கு உரிமையுண்டு

## இடித்துரைத்த சிங்கள எம்.பி

(கொழும்பு)

**யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு உறவினர்களுக்கும் தோழர்களுக்கும் உரிமை உண்டு என கூறியுள்ள தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், அவர்களின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.**

பாலஸ்தீனப் போர் தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போது பேசிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் உள்நாட்டுப் போரில் உயிரிழுந்தவர்களின் உறவினர்கள் மற்றும் தோழர்களுக்கும் போரில் இறந்தவர்களை நினைவுகூர உரிமை உண்டு.

முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழுந்தவர்களை நினைவுகூரும் வகையில் சம்பூரில் நினைவேந்தல் நடத்தியதற்காக 3 பெண்கள் மற்றும் ஒரு ஆண் கைது செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தார். நக்பா சம்பவத்தில் இறந்தவர்களை நினைவுகூரும் நாளாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ள தாகவும், அதே போன்று உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கு இலங்கையர்களுக்கும் உரிமை உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார்.

போரில் இறந்தவர்களை நினைவு கூரும் உரிமையானது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமை எனவும், இலங்கையிலும் அந்த உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 180 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 70-90 | 120 |
| தக்காளி | 160 | 120 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 180 | 100-130 | 180 |
| கோவா | 200 | 200 | 160 | 200 |
| கரட் | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 80 | 80 | 100 | 80 |
| புடோல் | 160 | 140 | 100 | 200 |
| வாழைக்காய் | 80 | 60 | 70-90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-350 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 230 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 250 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 170 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 600-750 | 350 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 300 | 380 | 300 | 300 |
| கறிமிளகாய் | 150 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 650 | 600 | 400-600 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 260 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80-100 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000-1350 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 80 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 110 | 60 |
| வல்லாரை | -- | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | -- | -- |

## இன்று ஒரு தகவல் 125



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஞானம்

ஒரு மாடி வீட்டிலே ஒரு பெரிய மனிதர் இருந்தார். மிகவும் விலையுயர்ந்த கார் ஒன்றை வைத்திருந்தார் வெளிநாட்டுக்கார். எங்கே போனாலும் அதிலே தான் போவார், வருவார். அவருடைய கால் மண் தரையிலே பட்டதே இல்லை அவ்வளவு வசதி. அப்பேற்பட்டவர் ஒரு நாள் திடீர் என்று இறந்து போய்விட்டார். அதன் பின்பு அவரைப் பற்றி அடுத்த ஊரிலே இரண்டு பேர் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஒருவர் சொன்னார். அந்தப் பெரிய மனிதர் இருந்தாரே... அவர் இந்த உலகத்தை விட்டு போய்விட்டார்.

இன்னொருவர்... எதிலே போனார்? அவருடைய காரிலே தானே! என்றார். இதைக் கேட்ட அடுத்தவருக்கு சிரிப்பு வந்துவிட்டது. உலகத்தை விட்டுப் போகும் போது என்னத்தை எடுத்துக் கொண்டு போக முடியும்? எல்லாவற்றையும் விட்டுட்டு போக வேண்டியது தான். அதனாலே இயற்கை எல்லாவற்றையும் ஒரே மாதிரித்தான் இந்த உலகத்திற்கு அனுப்புகிறது! ஒரே மாதிரியாகத்தான் இந்த உலகத்தை விட்டும் அனுப்புகிறது. அதிலே பெரிய மனிதன் சிறிய மனிதன் என்ற வித்தியாசமே இல்லை. வித்தியாசம் எல்லாம் இவர்களே ஏற்படுத்திக் கொள்வது தான். நான் பெரியவன் நீ பெரியவன் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஞானம் வரும் போது இந்த வித்தியாசம் மறையும்.

ஒரு ராஜா இருந்தார். தான் ஒரு ராஜா என்கின்ற நினைப்பு எப்பொழுதும் அவருக்கு உண்டு. அந்த ராஜாவும் ராணியும் ஒரு நாள் எங்கேயோ வெளியிலே போயிருந்தார்கள். அந்த அரண்மனையிலே ஒரு வேலைக்காரி! அந்தப் பெண்ணிற்கு என்ன வேலை? என்றால். அரசரோட மஞ்சத்தை தயார் செய்வது தான் வேலை. ஹம்சு தூளிகா மஞ்சம். அந்தப் படுக்கையை தயார் செய்வது என்றால் அது சாதாரண வேலை இல்லை. அதற்கு கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் ஆகுமாம். ராஜா தூங்குவது என்றால் சும்மாவா?

முதலிலே ஒரு ஜமுக்காளத்தை விரிக்க வேண்டும். அதற்கு மேலே ஒரு மெத்தையை விரிக்க வேண்டும். பிறகு அதற்கு மேலே காம்புகள் இல்லாத மலர்களைத் தூவ வேண்டும். இப்படி ஏழு அடுக்குகள் உண்டாக்கி அந்தப் படுக்கையை தயார் செய்ய வேண்டுமாம். வழக்கம் போல அன்றைக்கும் அந்த வேலைக்காரப் பெண் அந்த மஞ்சத்தை தயார் செய்தாள். வெளியே சென்ற ராஜாவும் ராணியும் இன்னமும் திரும்பி வரவில்லை. அவர்கள் வருவதற்குள் நானும் இந்தப் படுக்கையில் ஒரு ஐந்து நிமிடம் படுத்துப் பார்த்தால் என்ன? என்று ஒரு ஆசை. ஒரு ஐந்து நிமிடம் தானே என்று நினைத்து அந்த வேலைக்காரப் பெண் அதிலே ஏறி படுத்துப் பார்த்தாள். ஆனால் பாவம் அதிலே சுகமாக படுத்ததும் தூக்கம் வந்துவிட்டது. அசந்து போய் குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்து விட்டாள்.

நான்கு மணி நேரம் கழித்து அரசனும் அரசியும் திரும்பி வந்தார்கள். வந்த பார்த்தால் அழுக்கு ஆடையுடன் அந்த வேலைக்காரப் பெண் அரசனுடைய படுக்கையிலே படுத்திருந்தாள். ராஜாவிற்கு கோவம் வந்து விட்டது. நாம் எங்கே? இந்த வேலைக்காரி எங்கே? என்ற நினைப்பு வந்து விட்டது. உடனே கையைத் தட்டி காவலாளிகளைக் கூப்பிட்டார். அந்த வேலைக்காரியை ஒரு தூணிலே கட்டி வைத்து சாட்டையாலே அடிக்கும் படி உத்தரவு போட்டார். அதே போல் செய்தார்கள். சாட்டையடிபட்ட பெண் அழ வேண்டும் அல்லவா? அழவில்லை. ஒவ்வொரு அடிக்கும் அந்தப் பெண் சிரிக்க ஆரம்பித்துவிட்டாளாம்.

ராஜாவிற்கு இதைப்பார்த்ததும் ஆச்சரியமாகப் போய்விட்டது. அந்தப் பெண்ணைப் பார்த்து அழாமல் சிரிக்கிறாயே ஏன்? என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் அதற்கில்லை உங்கள் படுக்கையிலே நான்கு மணி நேரம் படுத்ததற்கே இத்தனை சவுக்கடி கிடைக்குதே! வாழ்நாள் பூறாக அந்தப் படுக்கையிலே படுத்த உங்களுக்கு எத்தனை சவுக்கடி கிடைக்கப் போகிறது என்று நினைத்தேன். அது தான் சிரிப்பு வந்தது என்றாளாம். அதைக் கேட்டதும் ராஜாவிற்கு அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. மனசு மாறியது. தன்னுடைய செயலுக்காக வருந்தினார். அந்தப் பெண்ணை விடுதலை செய்தர். அரசனுக்கு ஞானம் பிறந்த கதை இது!

இந்தக் கதையை ஒரு சிறிய பையன் ஒருவன் கேட்டான். அவனுடைய வீட்டிலே அவனுடைய அம்மா லட்டு தயார் செய்து ஒரு டப்பாவிலே வைத்திருந்தார். திடீர் என்று பத்து லட்டு காணாமல் போய் விட்டது. பையன் ஒரு லட்டை சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது அவனுடைய அம்மா கையும் களவுமாக பிடித்துவிட்டார். லட்டைத் தெரியாமல் திருடிச் சாப்பிடுவது தப்பு என்றார். அதற்கு தண்டனையாக ஒரு லட்டுக்கு 10 தோப்புக்கரணம் வீதம் போடு என்றார். பையன் காதைப் பிடித்துக் கொண்டு 20 தோப்புக்கரணம் போட்டான். மீதி 80 எங்கே என்று அம்மா கேட்டார். அது போட வேண்டியது நான் இல்லை அப்பா என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர்: அருளானந்தம் ஜேசுதாசன் பெண் விக்ரோறியா றஞ்சிததேவி**

**முகவரி : ஆதன இல 423/6 வீதி : யாழ். மானிப்பாய் வீதி, வட்டாரம் : 06**

வட்டாரம் **06 யாழ் மானிப்பாய்** வீதி. ஆதன இலக்கம் **423/6**. இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் **மேற்குப் பகுதி, மானிப்பாய் பருத்திக்காடும், மறு பிரிவுகளும்** எனும் பெயருள்ள நிலப்பரப்பு **17.70** குளி விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் **யாழ்ப்பாணம், கூழாவடி, ஆணைக்கோட்டையை** சேர்ந்த **அருளானந்தம் ஜேசுதாசன் பெண் விக்ரோறியா றஞ்சிததேவி** ஆகியவர்களால் "இவ் ஆதனத்தின் உரிமை யாளர்கள் தாமே" என பிரசித்த நொத்தாரிசு **அபர்ணா ஜனார்த்தன்** அவர்களால் எழுதப்பட்ட **1520** ஆம் இலக்க **2023.01.26** ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு **சோ.திருநாவுக்கரசு** அவர்களால் எழுதப்பட்ட **5721** ஆம் இலக்க **1955.06.09** ஆம் திகதிய உறுதி மூலம் **இராஜப்பு அருளானந்தம் பெண் சிசிலியாம் பிள்ளைக்கு** சீதனமாக வழங்கப்பட்டது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **பி.புஸ்பராஜா** அவர்களால் வரையப்பட்ட **9699** ஆம் இலக்க **2022.12.11** ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு **17.70** குளி கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - **அருளானந்தம் ஜேசுதாசன் பெண் விக்ரோறியா றஞ்சிததேவி**
கிழக்கு - **கபிரியல்பிள்ளை சாள்சும் பெண் மேரிபிரான்சிஸ்**
தெற்கு - **பாதை**
மேற்கு - **பாதை**

மேற்குறித்த ஆதனத்தை **அருளானந்தம் ஜேசுதாசன் பெண் விக்ரோறியா றஞ்சிததேவி** என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**
(761)

# தேசிய மட்ட கபடிப் போட்டிகள் ஜீன் மாதம் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

48 ஆவது தேசிய விளை யாட்டு விழாவின் ஓர் அங்க மாக தேசிய மட்ட கபடிப் போட் டிகள் கிளிநொச்சி மாவட்ட த்தில் எதிர்வரும் ஜீன் மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளன.

இந்நிலையில் தேசிய மட்ட கபடிப் போட்டி தொடர்பிலான முன்னோடிக் கலந்துரையாடல் நேற்று முன்தினம்கிளி நொ ச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது பங்பற்றுவோ ரின் தங்குமிடவசதி, பாதுகாப்பு ஏற்பாடு, குடிநீர், சுகாதார வசதி களுக்கான ஏற்பாடு கள் மற்றம் உள்ளக விளையாட்டு அரங் கின் முன்ஆயத்த செயற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராய ப்பட்டது.

உதவி மாவட்ட செயலாளர் சத்திய ஜீவிதா, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தனு ராஜ், விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள கபடிப் போட்டிக்கான இணைப் பாளர் ரூபான் ராபக்ஷ, துறைசார்ந்த அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டி ருந்தனர். (நி-6)



தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வவுனியா மாவட்ட பொறுப்பாளராக இருந்த கிறிஸ்டி குகராஜின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.


(படம்: வசந்தரூபன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3118

### விதுஷா




### மதுமிதா





### கஜன்




### லிந்துஜா




### சங்கவி




### மாதவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 482





ஆனால் அவர்களை உயிருடன் போகவிட்டது சரியா? அவர்கள் எங்கே போய்க் கரை ஏறுவார்களோ? இன்னும் என்னென்ன சூழ்ச்சிகளையும் கோர கிருத்யங்களையும் செய்வார்களோ? கடவுள் இருக்கிறார், நாம் என்ன செய்ய முடியும்? எப்படியாவது இளவரசருடன் மறுமுறை சேர்ந்து விட்டால் போதும்! இருந்தாலும் அவர் இப்படி என்னைக் கைவிட்டிருக்கக் கூடாது! பூங்குழலியுடன் என்னையும் யானை மீது ஏற்றி அழைத்துப் போயிருக்கலாம். மறுப்படியும் அவரைச் சந்திக்க நேர்ந்தால், கட்டாயம் பலமாகச் சண்டை பிடிக்க வேண்டும். "உங்கள் பழமையான சோழ குலத்தின் சிநேகதர்மம் இதுதானா?" என்று கேட்க வேண்டும். ஆனால் அப்படிக் கேட்கும் சந்தர்ப்பம் வரப்போகிறதா?.. இளவரசரை மீண்டும் பார்க்கப் போகிறோமா? ஏன் பார்க்க முடியாது? நான் இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டதைச் சேநாதிபதியும் ஆழ்வார்க்கடியானும் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது செய்யாமலா இருப்பார்கள்? இளவரசரை அவர்கள் சந்தித்திருந்தால் கட்டாயம் சொல்லியிருப்பார்கள் அல்லவா?

இப்படி வந்தியத்தேவன் யோசித்துக் கொண்டு நின்ற நேரத்தில் படகு கடலில் வெகு தூரம் போய்விட்டது என்பதைக் கவனித்தான். படகு அவ்வளவு வேகமாகச் சென்றது எப்படி? படகு மட்டும் போகவில்லை தான் ஏறியிருந்த கப்பலும் இலேசாக அசைந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. அதனாலேதான் கப்பலுக்கும் படகுக்கும் அவ்வளவு சீக்கிரத்தில் அவ்வளவு தூரம் ஏற்பட்டுவிட்டது! கடலில் அலைகள் பெரிதாகிக் கொண்டு வருவதையும் வந்தியத்தேவன் பார்த்தான். அது மட்டுந்தானா? இது என்ன? பட்டப் பகலில் திடீரென்று ஒரு பக்கம் இருண்டு வருகிறதே! தென்மேற்குத் திசையை வந்தியத்தேவன் நோக்கினான். சற்று முன்னால் முழு உயரம் தெரிந்த மேகம் அதற்குள் பிரம்மாண்டமாக வளர்ந்து படர்ந்து மேற்கு வானத்தைப் பெரும்பாலும் மறைத்து விட்டதைக் கண்டான். இன்னும் அம்மேகங்கள் திட்டுத்திட்டாகத் திரண்டு புரண்டு வானத்தில் வெகு வேகமாக மேலேறி வந்தன. அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மேற்கு வானத்தில் பாதி தூரம் இறங்கியிருந்த சூரியனை மறைத்து விட்டன. பிறகு மேற்குத் திசையும் தெற்குத்திசையும் மேலும் இருண்டு வந்தன. வானத்தின் கரிய மேகங்கள் கடலிலும் பிரதிபலித்துக் கடல் நீரையும் கரிய மை நிறமாகச் செய்தன. கடல் எங்கே முடிகிறது, வானம் எங்கே தொடங்குகிறது என்று கண்டுபிடிக்க முடியாமல் கடலும் வானமும் ஒரே கன்னங்கரிய இருள் நிறம் பெற்றிருந்தன.

மேகத்திரள்கள் மேலும் புரண்டு உருண்டு வந்தியத்தேவனுடைய தலைக்கு மேலே வந்தன. பிறகு கீழ்த் திசையிலும் இறங்கத் தொடங்கின. படகு சென்ற திசையை வந்தியத்தேவன் நோக்கினான். படகு இருந்த இடமே தெரியவில்லை. அவனுடைய பார்வையின் எல்லைக்கு அப்பால் போய்விட்டது போலும்! காற்றின் மெல்லிய ரீங்காரம் 'ஹோ' என்ற பெரும் இரைச்சலாக மாறி விட்டது.


அத்துடன், நிமிஷத்துக்கு நிமிஷம் பெரிதாகி வந்த அலைகளின் இரைச்சலும் சேர்ந்தது. கப்பலில் விரித்திருந்த பாய்கள் சடபடவென்று அடித்துக் கொண்டன. மரங்களும் கட்டைகளும் ஒன்றோடொன்று உராய்ந்து ஆயிரம் குடுமிக் கதவுகளைத் திறந்து மூடும் சத்தத்தை உண்டாக்கின. பாய்மரங்களை வந்தியத்தேவன் அண்ணாந்து பார்த்தான். அவற்றின் நிலையிலிருந்து கப்பல் ஒரு திசையாகப் போகாமல் சுழன்று சுழன்று வருகிறது என்று தெரிந்து கொண்டான்.

'சுழிக்காற்று' என்று அடிக்கடி சொன்னார்களே! அந்தச் சுழிக்காற்றுதான் அடிக்கப்போகிறது போலும்! சுழிக்காற்று அடிக்கும் போது பாய் மரங்களிலிருந்து பாய்களைச் சுழற்றிச் சுற்றி வைக்க வேண்டும் என்று வந்தியத்தேவனுடைய அறிவுக்குப் புலப்பட்டது. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வீராதி வீரன்!



முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் பால்பாண்டி என்ற இளைஞன் இருந்தான். தன் குலத் தொழிலான செருப்பு தைக்கும் தொழிலைச் செய்து வந்தான்.

"ஏதேனும் வீரச் செயல் செய்ய வேண்டும். எல்லோரும் தன்னைப் பாராட்ட வேண்டும" என்று எண்ணியபடி இருந்தான்.

கடைக்குச் சென்ற அவன் வெண்ணெய் வாங்கினான். அதை மேசையின் மேல் வைத்தான். செருப்பு தைக்கத் தொடங்கினான். ஏராளமான ஈக்கள் வெண்ணெயை மொய்த்துக் கொண்டிருந்தன.

இதைப் பார்த்த அவன் கோபம் கொண்டான். செருப்பை எடுத்து வெண்ணெய் மீது ஓங்கி ஓங்கி அடித்தான். நிறைய ஈக்கள் இறந்தன. ஏராளமான ஈக்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தன.

அவற்றை எண்ணினான். இறந்த ஈக்களின் எண்ணிக்கை இருநூறு இருந்தன. அடிபட்ட ஈக்களின் எண்ணிக்கை முந்நூறு இருந்தது. தன் வீரத்தை நினைத்த அவனுக்குப் பெருமையாக இருந்தது.

கடைக்குச் சென்ற அவன், வீரர்கள் அணியும் உடைகளை வாங்கினான். அவற்றை அணிந்து கண்ணாடியின் முன் நின்று பார்த்தான். அவனுக்கே பெருமை தாங்கவில்லை.

மாவீரனைப் போலப் பெருமிதமாக நடந்து தலை நகரத்தை அடைந்தான். தயக்கம் ஏதும் இல்லாமல் அரசவைக்குள் நுழைந்தான்.

அரசரை வணங்கிய அவன் "என்னைப்போன்ற மாவீரன் யாருமே இருக்க முடியாது. ஒரே நாளில் நான் இருநூறு பேரைக் கொன்றேன். முந்நூறு பேரைக் காயப்படுத்தினேன், என்று பெருமை பொங்கச் சொன்னான்.

அவனை மேலும், கீழும் பார்த்தான் அரசன்.

"உன்னைப் பார்த்தால் வீரனைப் போலத் தெரியவில்லையே. தோற்றத்தை வைத்து யாரையும் மதிப்பிடக் கூடாது. உன் வீரத்திற்கு ஒரு சோதனை வைக்கப் போகிறேன்," என்றார்.

"அரசே! சோதனை என்னவென்று சொல்லுங்கள். என் வீரத்தை உங்களுக்கு வெளிப்படுத்துகிறேன்!"

"நம் தலை நகரத்தை அடுத்துள்ள காட்டில், கொடிய பூதம் ஒன்று உள்ளது. அதைக் கொல்வதற்காக எத்தனையோ வீரர்கள் சென்றனர். யாருமே உயிருடன் திரும்பியதில்லை," என்றார் அரசர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரிய எண்ணங்களின் பிரதிபலிப்பே எளிமை தன்மையாகும் - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமரை தீக்குளிக்குமாறு சீதை கேட்காதவரை...

எடுத்த எடுப்பில் மற்றவர்கள் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகின்ற ஒருவகைக் கலாசாரம் நம் மத்தியில் வெள்ளை ஈ போலப் பரவியுள்ளது.

எனினும் தர்மத்தைப் பின்பற்ற நினைக்கின்ற எவரும் மற்றவர்கள் மீது பழிசுமத்த அஞ்சுவர்.

ஆம், இப்போது நம் மத்தியில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் பேசுபடுபொருளாகியுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கருத்து எழுகை பெற்றுள்ளது.

அதேபோன்று பொதுவேட்பாளர் என்பது ஒரு தேவையற்ற விடயம் என்ற வாதமும் சமாந்தரமாக எழுந்து நிற்கிறது.

எம்மைப் பொறுத்தவரை இரண்டு தரப்பின் கருத்தையும் நாம் எழுந்தமானமாக நிராகரிக்க மாட்டோம்.

அதேவேளை பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் எனவும் பொதுவேட்பாளரை நிறுத்தக் கூடாது எனவும் தத்தம் கருத்துக்களை முன்வைக்கின்றவர்கள்; குறித்த தீர்மானத்தை எத்தகைய அனுமானங்களையும் ஆதாரங்களையும் நியாயப்பாடுகளையும் வைத்துக் கொண்டு எடுத்தனர் என்பதுதான் நம் கேள்வி.

ஏனெனில் தமிழர்களாகிய நாம் எந்த முடிவை எடுத்தாலும் அது ஏதோ சிங்களத் தரப்புக்கு சாதகமாக அமையும்.

அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் தேவை என்ற வாதத்தை முன்வைத்தால், அந்த வாதம் தானாகவே சிங்கள இனம் சார்ந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்குச் சாதகமாக அமையும்.

அதேபோன்று தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தக்கூடாது எனக் கருத்துரைப்பவர்களது கருத்தும் இன்னொரு சிங்களத் தரப்புக்கு சாதகத்தைக் கொடுக்கும்.

இந்த நிலைமை இல்லாமல் இருக்க முடியாதா? என்று கேட்டால், அதற்கான பதில் இல்லை என்பதுதான்.

காரணம் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் வெல்லக்கூடிய சந்தர்ப்பம் இல்லாதவரை சிங்களவர் ஒருவரே ஜனாதிபதியாக வெற்றி பெறுவார்.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பு எந்தத் தீர்மானத்தை எடுத்தாலும் அது ஏதோவொரு சிங்கள வேட்பாளருக்குச் சாதகமாக அமையும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் எனக் கூறுகின்றவர்கள்; பொது வேட்பாளர் வேண்டாம் எனக் கருத்துரைப்பவர்களைப் பார்த்து, நீங்கள் யாரை வெல்ல வைப்பதற்காக இப்படிக் கருத்துரைக்கிறீர்கள் எனக் கேட்கிறார்கள்.

இந்தக் கேள்விக்குள், தாங்கள் மட்டும் தான் தமிழ்த் தேசிய பற்றாளர்கள். தாங்கள் மட்டும் தான் நேர்மையானவர்கள் என்பது போன்ற முந்திக் கொள்ளும் முறைமை உள்ளது.

என்ன செய்வது சீதையைத் தீக்குளிக்குமாறு இராமர் கேட்டபோது இராமா! நீயும் தீக்குளித்து உன் தூய்மையை நிரூபி எனச் சீதை கேட்காதளவில் இன்றுவரை இராமர் தன்னைப் புனிதராகவே கருதுகிறார்.

ஆனால் கற்புடைத்தேவி மீது ஐயம் கொண்டது மிகப்பெரும் குற்றம். ஆயினும் இராமர் தீயில் இறங்காததால், அவரின் குற்றங்கள் அறவிடமுடியாக் கடன் போலக் கிடக்கிறது.

# பொலிஸின் காட்டுமிராண்டித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது

## சம்பூர் விவகாரத்துக்கு உறவுகள் கண்டனம்

(கிளிநொச்சி)

சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியதற்காக பெண்கள் உள்ளிட்ட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த கண்டன அறிக்கையில்,

தற்போது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் வாரத்தை கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கி, நினைவு கூருகிறார்கள்.

இது தமது இழந்த உறவுகளை நினைவு கூரும் செயல் மட்டுமல்ல, உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கடந்து வந்த பேரவலத்தை, இவற்றின் மத்தியிலும் உயிர் பிழைத்த அதிசயத்தை மீட்டுப் பார்க்கும் ஒரு நிகழ்வாகவும் உள்ளது.

இந்நிலையில் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியதற்காக மூன்று பெண்கள் உள்ளிட்ட நால்வர் கமலேஸ்வரன் விஜிதா (வயது 40), செல்வவினோத்குமார் சுஜானி (வயது 40). நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் (வயது 43) ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ள கலைப்பிரிவு மாணவி கமலேஸ்வரன் தேமிலா (வயது 22) ஆகியோரை பொலிஸார் இரவு வீடு புகுந்து துன்புறுத்தி கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

பொலிஸாரின் இந்த காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மேலும் இது தொடர்பில் பெண்கள் அமைப்புகள் தமது கண்டனத்தை தெரிவித்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றோம்.

மேலும் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை சர்வதேச நாட்டுத் தூதுவர்கள் உணர்ந்து இலங்கைக்கு தங்கள் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,10)

# மகளின் சிகிச்சைக்கென பாசாங்கு செய்து யாசகம் பெற்ற தந்தை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு -காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த நபரொருவர் தனது மகளுக்கு சிறுநீரக சிகிச்சைக்கு பணம் வேண்டும் என பொய் கூறி யாழில் யாசகம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காடு சந்தைப் பகுதியில் 4 வயது சிறுமியை சிறுமியின் இரு சிறுநீரகங்களும் பழுதடைந்துள்ளதாகவும், அதற்கான சிகிச்சைக்கு பண உதவி செய்யுமாறு கோரி ஒருவர் நிலவும் கடும் வெப்பமான நிலையில் சிறுமியை சக்கர நாற்காலியில் இருத்தி வைத்து ஒருவர் யாசகம் பெறுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சிறுமியை மீட்டு யாழ். போதனா மருத்துமனையில் அனுமதித்ததுடன், யாசகம் பெற்ற நபரையும் கைது செய்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் சிறுமிக்கு எவ்வித மான உடல்நலக் குறைபாடுகளும் இல்லை. சிறுமி ஆரோக்கியமாக உள்ளார் என தெரியவந்ததையடுத்து கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை, தான் காத்தான்குடி பகுதியை சேர்ந்தவர் எனவும், சிறுமி தனது மகள் எனவும் கூறியுள்ளார். இதனையடுத்து நீதிமன்றில் அந்நபரை முற்படுத்தியதையடுத்து, குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறும், சிறுமியை சிறுவர் காப்பகத்தில் அனுமதிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (நி-6)

## கிளி. மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குழுக்கூட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி குளத்தில் இருந்து இதுவரைகாலமும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடிநீரில் பல்வேறு கழிவுகள் கலக்கப்படுவாதால் மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்நிலையில் இனிவரும் காலங்களில் இரணைமடுக் குளத்தில் இருந்து நீரேந்தும் பகுதிகளான பண்ணங்கண்டி மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பகுதியிலிருந்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன. மேலும் அமைச்சர் டக்ளஸ், கமக்கார அமைப்பு, நீர்வடிகால் அமைப்பு சபையினர் மற்றும் இரணைமடு நீர்ப்பாசன பெறியியலாளர்கள் தெரிவிசெய்யப்பட்ட பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். (நி-6-100-315-316)

## கால்வாயில் தேங்கிய பெருமளவான பிளாஸ்ரிக் பொருட்கள்

## தூர்வாரிய நகரசபையினர்

(வவுனியா)

வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக வீதியோரங்களில் வீசப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பொருட்கள் மழைநீரில் அடித்துச் செல்லப்பட்டு கால்வாயில் தேங்கியிருந்த நிலையில் நகரசபையின் சுகாதார தொழிலாளர்கள் கால்வாய்காளை தூர்வாரும் நடிவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை வயல் வெளிகளிலும் பிளாஸ்ரிக் பொருட்கள் மழைநீரில் அடித்து வரப்பட்டமையால் வயல் வெளிகளிலும் பிளாஸ்டிக் பொருட்கள் நிரம்பிக் காணப்பட்டன.

நகர்ப்பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை போடுவதற்கு போதுமான கழிவுத் தொட்டிகள் இல்லாமையும் இதற்குக் காரணம் என பொதுமக்கள் தெரிவித்தனர். (நி-6)

## சிறுமி துஷ்பிரயோகம்; விடுதி முகாமையாளர் கைது

(குருமன்காடு)

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து 15 வயது சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விடுதி முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 15 வயது பெண் ஒருவரை வவுனியா நகரையண்டிய தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றிற்கு அழைத்து சென்ற இளைஞர் ஒருவர் குறித்த சிறுமிக்கு போதை மருந்து கொடுத்து கூட்டு வன்புணர்வில் ஈடுபட்டதாகவும், அதற்கு உடந்தையாக செயற்பட்ட பெண் உட்பட 4 பேர் அண்மையில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும்வவுனியா பொலிஸார் சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படும் குறித்த பகுதியில் உள்ள விடுதியின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின் அந்நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல் நிகழ்வுகளை தடுப்பது

# மோசமான மனித உரிமை மீறலாகும்

## யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

**நினைவேந்தல் நிகழ்வுகளை தடுப்பது, கஞ்சி காய்ச்சி பரிமாறியவர்களை கைது செய்து தடுத்து வைப்பது போன்றன சமாதானத்தில் பின்னடவை ஏற்படுத்தும் செயல்கள் என யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதை தடுப்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறலாகும். தற்போது பல்வேறு இடங்களில் இடம்பெற்றுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாற்றம் நிகழ்வுகளை ஆட்சியாளர்கள் தடுக்க முயல்வது குறிப்பாக கிழக்கில் சம்பூர் பகுதியில் இந்நிகழ்வுகளில் பங்கெடுத்தவர்களை இரவிரவாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது மிக மோசமான மனித உரிமை மீறலாகும்.

ஒரு பக்கத்தில் இப்படியான மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு கொண்டு மறுபக்கத்தில் காணாமல் போனவர்கள் அலுவலகத்தின் செயற்பாடுகளையும், இணங்களுக்கான நல்லிணக்க செயற்பாடுகளையும் முடக்கிவிடுவது எல்லாம் வெறும் போலி நாடகமே, சர்வதேசத்தை திருப்திப்படுத்த அரங்கேற்றப்படும் நாடகங்களேயன்றி வேறில்லை.

சர்வதேச மன்னிப்புசபை இலங்கையில் இடம்பெற்று வரும் சிறுபாண்மையினருக்கான மனித உரிமை மீறல்களை துவக்கத்தில் இருந்தே சுட்டிக்காட்டி வருவது நாம் அறிந்ததே.

இவ்வாரத்தில் இச்சபையின் செயலாளர் அக்னஸ் கலமார்ட் இலங்கைக்கு வந்து குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பங்கெடுப்பதை நாம் வரவேற்கின்றோம்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியேறிய/வெளியேற்றப்பட்ட பின் நடுநிலை சாட்சியங்கள் இல்லாத நிலையிலேயே மக்கள் கொத்து கொத்தாக கொன்றழிக்கப்பட்டனர்.

இந்நிலையில் தான் பொது மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் வெற்றிகொள்ளப்பட்ட போர் என்று அரசு சொல்லிக் கொண்டிருந்த போதும் மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை புள்ளிவிபரங்களின் படி இறுதிப்போரில் மட்டும் 146,000 மக்களுக்கு மேலாக கொன்றழிக்கப்பட்டார்கள் என்ற விபரத்தை வெளிக்கொணர்ந்து இருந்தார்.

இவர்களை நினைவு கூறும் நிகழ்வுகளைத் தடுப்பது, கஞ்சி காய்ச்சி பரிமாறுபவர்களை கைது செய்வதும் தடுத்து வைப்பதும் பொறுப்புக் கூறலக்கு, நீதியை நிலை நாட்டுவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நிலைத்த சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும் பாரிய பின்னடைவு ஆகும் என்பதை யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வலியுறுத்துகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## விஜயதாசவிற்கு எதிரான தடை நீடிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த ஆகியோருக்கு பிறப்பிக்கப்பட்ட தடை உத்த ரவு எதிர்வரும் 27ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதில் செயலாளர் மற்றும் பதில்த் தலைவராக முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக இந்த தடை உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க மற்றும் மகிந்த அமரவீர ஆகியோர் தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த போதே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# கொரோனா தடுப்பூசி குறித்து அச்சம் வேண்டாம்

# தேசிய ஔடதசபை விசேட அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா காலப்பகுதியில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என தேசிய ஔடத ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

அதன்படி, பிரித்தானியாவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என உற்பத்தி நிறுவனமே ஏற்றுக்கொண்டதாகவும், அதனை அவர்கள் முன்பே அறிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பீட்டுள்ளார்.

ஆனால், தடுப்பூசி எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை அல்ல எனவும், தடுப்பூசி செலுத்தப்பட்ட சில சந்தர்ப்பத்தில் பக்கவிளைவுகள் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, தடுப்பூசி பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது என் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரித்தானியாவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என அந்த தடுப்பூசியை உற்பத்தி செய்த நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, குறித்த நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட அஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 24 மணித்தியாலங்கள்

# 7 மாணவிகள் துஷ்பிரயோகம்

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களுக்குள், 16 வயதுக்குட்பட்ட ஏழு பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது .

இந்த பாடசாலை மாணவிகள் 12, 14, 10 மற்றும் 15 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் , மனம்பிட்டிய, மாங்குளம், இரத்தினபுரி, வெல்லம்பிட்டிய, வெலவாலி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

# விடுதலைப்புலிகள் மீதான தடை மூலம் சீனாவிற்கு உதவிய இந்திய அரசு

## இயக்குநர் கௌதமன் சுட்டிக்காட்டு

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான இந்திய அரசாங்கத்தின் நீடிக்கப்பட்ட தடையானது நேர்மையற்ற மற்றும் அறமற்ற ஒரு செயல் என இயக்குநர் கௌதமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இந்த தடை உத்தரவின் மூலம் இந்திய அரசாங்கம் சீனாவிற்கே பாரிய அனுகூலத்தினை வழங்கியுள்ளதாக இயக்குநர் கௌதமன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய. யூனியன் புலிகள் மீதான தடையை நீக்கியுள்ள நிலையில் இந்திய அரசாங்கம் மேலும் 5 வருடங்களுக்கு தடையை நீடித்துள்ள செயல் என்பது அறமற்ற ஒரு செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக இந்தியாவே விதித்துக் கொண்ட தடையே இதுவென இந்தியா உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றும் இயக்குநர் கௌதமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் திட்டமிட்ட தமிழின அழிப்பு நடந்து முடிந்து 15 ஆண்டுகளை கடந்துள்ளது.

இந்த காலப்பகுதியில் இந்தியாவிலோ அல்லது உலகிலுள்ள எந்தவொரு நாட்டிலோ விடுதலைப்புலிகள் அமைப்பினால் சிறியதொரு அசம்பாவிதம் கூட நடக்காத நிலையில் தமிழ் நாட்டின் மீது பழியினைப் போட்டு இந்திய அரசாங்கம் இந்த தடையினை நீடித்துள்ளது.

ஈழத் தமிழர்களும் விடுதலைப் புலிகளும் தங்களது தாய்நாடு தமிழீழம் என்றும் தந்தையர் நாடு இந்தியா என்றும் கூறி பெருமையுடன் வாழ்ந்து வருவதாக இயக்குநர் கௌதமன் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சிங்களப் பகுதியில் மட்டுமல்ல வடக்கு கிழக்கிலும் கச்சத்தீவிலும் சீனர்களின் அத்துமீறல் ஆக்கிரமிப்பு பெருகிக்கொண்டே வருகிறது.

எனவே புலிகள் மீதான தடை நீடிப்பு மூலம் சீன அரசுக்கு இந்திய அரசு உதவி செய்துள்ளதாக தெரிவித்த இயக்குநர் கௌதமன், ஒருநாள் இந்துமாக் கடல் சீனாவிடம் வசமாகும் போது இந்தியா இந்த தடை குறித்து கரிசனை கொள்ளும் என்றும் இயக்குநர் கௌதமன் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதையடுத்தே, அமைதியின்மை ஏற்பட்டது. (ம-7,10)

## பாலியாறு...

பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பாலியாறு நீர்த்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 250 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களையும் பூநகரி பிரதேசத்தின் ஒரு பகுதியும் இந்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, மேற்குறித்த பகுதிகளில் வசிக்கும் 127,746 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை விநியோகிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ம-7,10,33,285)

## தமிழ்த் தேசிய...

இந்தத் தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே 18ஐ தமிழ்த் தேசிய துக்க நாளாக நாம் அனைவரும் கடைப்பிடிப்போம்.

இந்த நாளில் முள்ளிவாய்க்காலில் சென்று நினைவேந்த கூடியவர்கள் வழமைபோன்று முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பு ஒழுங்கு செய்த நிகழ்வுகளில் பெருந்திரளாக பங்கேற்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

அதேநேரம் அங்கு செல்ல முடியாதவர்கள் தங்கள் பிரதேச வழிபாட்டுத்தலங்களில் ஒன்றுகூடி பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் அனைத்து தமிழர் வணிக வளாகங்கள் பொது இடங்களில் கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் கறுப்புப் பட்டியுடன் கடமைகளில் ஈடுமாறும் கோருகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## யுத்தக்...

அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை இராணுவத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா? என்பது குறித்து உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடுவதாக ஐ.நா.சபையின் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளமை சாதாரணவிடயமல்ல.

30 வருட கால யுத்தத்தின்போது இஸ்ரேல் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. புலிகளுக்கு எதிராக அமெரிக்கா எவ்வித பிரேரணைகளையும் கொண்டு வரவில்லை. அதேபோன்று இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாகவும் எந்த பிரேரணைகளையும் அமெரிக்கா கொண்டு வரவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்தி அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, அரசியல் தீர்வு குறித்து ஆராயுமாறு அமெரிக்கா அழுத்தம் பிரயோகித்தது. விடுதலைப்புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க 29 ஆயிரம் இராணுவத்தினர் தமது உயிரை தியாகம் செய்தார்கள்.

இந்த தியாகத்துக்கு தற்போது மதிப்பளிக்கப்படுகிறதா என்பது சந்தேகத்துக்கிடமாக உள்ளது. இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வெளியக பொறிமுறை நீடித்தால் இலங்கையில் சுயாதீனத்துக்கு பாதிப்பு ஏற்படும்.

தமிழர்களுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் வடக்கு கிழக்கில் தனி ஈழத்தை ஸ்தாபிப்பதற்கு முயற்சிக்கின்ற அடிப்படைவாத நோக்கம் வெற்றி பெறும்" என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மேலும் குறிப்பிட்டார். (ம-7,10)

## குடும்பப்...

சேர்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் கடந்த சில நாட்களுக்கு முன்பாக தீக்காயத்திற்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக மேற்படி பெண் தனக்குத்தானே தீ வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. மந்துவிலைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான 36 வயதுப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7,10,30)

## கட்டைக்காடு...

கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடி முறைகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்களால் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை வெற்றிலைக்கேணி கடற்படையினர் கடற்பரப்பில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் ஒளிபாய்ச்சி மீன் பிடித்த 18 பேர் 7 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,10)

## அரசு...

தெரிவித்தார்.

'ஊழலை ஒழிப்போம்' என்பதை அரசியல் கோஷமாக பயன்படுத்துவதைக் கைவிட்டு, புதிய அரசியல் கலாச்சாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## கிளிநொச்சி...

பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இவ்விடயம் நீண்ட நேரம் பேசப்பட்டது.

கிளிநொச்சி மக்களிற்கான குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக இரணைமடுக் குளத்திலிருந்து கிளிநொச்சி குளத்திற்கு நீர் பெறப்பட்டு சுத்திகரித்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கிளிநொச்சி குளத்தில் வைத்தியசாலை கழிவுகள், இராணுவ முகாம் மற்றும் நகர்ப்புற கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள் கலப்பதால் சுத்தமான குடிநீரை சுத்திகரிப்பதில் சிக்கல் காணப்படுவதாக சம்பந்தப்பட்ட சபையால் வழங்கப்பட்ட தகவலை இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் சபையில் குறிப்பிட்டார்.

இன்று (நேற்று) குளியலறையயன் பாட்டில் இந்த விடயத்தை தானும் அவதானித்ததாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி குளத்தையும் பாதுகாக்காமல் ... (continues)

எனத் தெரிவித்த அமைச்சர், சுத்தமான குடிநீரை வழங்கக்கூடிய பகுதியை அடையாளம் கண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-7,10)

## வடக்கு...

உள்ள இலங்கையர்களுக்கு அமெரிக்காவின் தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் ஆதரவுக்கான வழிகளையும் ஆராய்வதற்கான சந்திப்புகளை முன்னெடுப்பதற்காகவே யாழ்ப்பாணத்திற்கான குறித்த விஜயத்தை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

மேலும் சிவில் சமூகம், இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள் ஆகியோரின் பல தரப்பட்ட கண்ணோட்டங்களை கேட்பதற்காக தாம் இந்தப் பயணத்தை முன்னெடுத்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10,33)


மஹஜன சம்பத — திகதி 2024.05.15 — சீட்டிழுப்பு இலக்கம் 5476 — P 3 5 2 9 9 9
அத சம்பத — P 2 9 9 9 — சீட்டிழுப்பு இலக்கம் 051 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.05.15 — சீட்டிழுப்பு இலக்கம் - 1506 — J 16 37 41 62 J — Double Chance 49391

மெகா பவர் — திகதி 15/05/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1824 — H 20 21 41 46 67 — 44196

லக்கி 7 VIP — திகதி 2024.05.15 — சீட்டிழுப்பு இலக்கம் 302 — H 4 3 8 7 9 5 H

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3718 — சீட்டிழுப்பு திகதி 15.05.2024 — N 11 32 35 57 — N — 32555

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.05.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0785 — மேஷம் 04 05 36 54 மேஷம் — 26340 — 14

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் தன சம்பத — 15.05.2024 — வெற்றி வாரம் 184 — வர்ணம் பச்சை — V 6 4 6 7 0 0 — Q 29196 — அடுத்த சுப்பர் ஜக்பொட் 22,319,900.00 — DLB

SUPER BALL — 2450 — சிவப்பு — 15.05.2024 — புதன்கிழமை — 28 30 36 45 X — 31865 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,554,144.00 — DLB

சனிதா — 2024.05.15 — வெற்றி வாரம் 4611 — 22 40 67 74 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,904,463.20 — 36289 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4162 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.05.15 — தினம் புதன்கிழமை — 05 11 51 55 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 9,329,905.60 — 163102 — DLB

லக்ன வாசனா — 1626 — 15.05.2024 புதன்கிழமை — Q 40 30 36 52 56 — 960383 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 522,801,790.20 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.05.15 — வெற்றி வாரம் 2025 — வர்ணம் மஞ்சள் — 19 20 24 27 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,451,194.40 — 39143 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2276 — 2024.05.15 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 113,327,444/- — 04 14 22 48 E — 292787 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (764)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## NEC
யாழ்நகர்

A/L 2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம் : May 19
ஞாயிறு காலை 09 மணி

மாணவர்கள் பாடத் தெரிவினை மேற்கொள்வதற்காக இம் மாதக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது (765)

தொடர்பு : 076 5350 999

## KBK - கந்தர்மடம்
A/L 2026
(தமிழ் / ஆங்கில மொழி மூலம்)

கணக்கீடு
திரு.க.பா. பாலகஜன் SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl

ஆரம்பம்: 20/05/2024 திங்கள் மாலை 04.30 மணி

A/L 2024, A/L 2025 பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றது. (742)

✆ - 077 4520 043

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-0376)

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
✆0777-068-777
v2vacancies@gmail.com

## V2 VISA SERVICES
கனடா
✆ 077 77 20 322
✆ 077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas • Online Appointments
- இந்தியா Visas • Online Visas - All countries
- Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு (C-0376)

## CANADA VISA
UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna. (511)

## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.

A/L 2026

தொழில் நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.30 மணி

A/L 2024,2025 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (C-0374)

தொடர்புகளுக்கு : 077 017 5346

## DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2026
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் : 25.05.2024 காலை 8.00 மணி (சனி) (C-0375)
நிர்வாகம் : 077 7789 815

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை. (757)

077 88 62 927

## A/L 2026
கலை
வர்த்தகம்
மே - 18
காலை - 9
DMI Jaffna (766)
077 848 0604

## A/L தொழினுட்பப்பிரிவு
smart thinking leads to innovate
Techna
Technical Institute

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026
19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு P.நிறோஜனன்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி
பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்
ICT — T.லவன்
கணிதம் — T.சசிகரன்
விவசாய விஞ்ஞானம் — S.சஜீபன்
புவியியல் — S.P.கரன்

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?
- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்.
- இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549 (762)

## NEW SCIENCE WORLD
NEW SCIENCE WORLD VICTORY MUST
கணித விஞ்ஞானப் பிரிவுகள்
A/L 2026 Batch
Tamil & English Medium

நேரடி வகுப்புக்கள் மற்றும் Zoom ஊடான வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | : | திரு.R.குமரன்<br>திரு.R.குகன் |
| இரசாயனவியல் | : | திரு. டயஸ்<br>திரு.K.T.சிவகுமார் |
| உயிரியல் | : | திரு.N.T.கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | : | திரு.S.S.செந்தில்ராஜ்<br>திரு.V.ஹரிகரன் |
| ICT | : | திரு.T.லவேந்திரன் |

ஆரம்பம் : 23.05.2024 (வியாழக்கிழமை) காலை 8.00 மணி
அனுமதிகளை 19.05.2024(ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு
077 336 4055, 021 221 6690
077 336 4030, 075 836 4055

NEW SCIENCE WORLD
Navalar Road, Brown Road Junction, Jaffna. (C-0373)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.